யாழ்ப்பாணம்

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 வைகாசி 30 வெள்ளிக்கிழமை (12-06-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 197

## வலி. வடக்கு, வலி. மேற்குப் பகுதிகளில்

# ஸ்ரீலங்கா படைகள் கொடூரம்

# ஏழு பேர் பலி; 100 பேர் காயம்

## நேற்று முழுநாளும் விமானங்கள் அனர்த்தம் ஷெல், பீரங்கிகளினால் குடாநாடு அதிர்ந்தது

யாழ்ப்பாணம், ஜூன் 12

வலிகாமம் வடக்கு, வலிகாமம் மேற்குப் பகுதிகளின் மீது ஸ்ரீலங்காவின் முப்படைகளும் நேற்று முழுநாளும் நடத்திய கொடூரத் தாக்குதல்களில் அப்பாவிப் பொது மக்கள் ஏழு பேர் கோரமாகப் பலியானார்கள்; சுமார் நூறு பேர் வரை காயமடைந்தனர்.

இப் பகுதிகள் மீது நேற்று முழுநாளும் விமானங்கள் அகோரக் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின. ஸ்ரீலங்கா படை முகாம்களில் இருந்து நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல்களினாலும் கடற் பிரதேசங்களிலிருந்து நடத்தப்பட்ட பீரங்கித் தாக்குதல்களினாலும் குடாநாடு அதிர்ந்தது.

நேற்றுக்காலை ஐந்து மணி முதல் மாலை 6 மணி வரை படையினரின் வெறியாட்டம் தொடர்ந்தது.

சுன்னாகம், மல்லாகம், தெல்லிப்பழை, அளவெட்டி, அம்பனை, கொல்லங்கலட்டி, பன்னாலை, கருகம்பானை, விளான், சேந்தாங்குளம், இளவாலை, வடலியடைப்பு, பண்டத்தரிப்பு, மாதகல், சுழிபு

[6ஆம் பக்கம் பார்க்க]

## கடற்படையிடம் சிக்கிய மீனவர்

யாழ்ப்பாணம் ஜூன் 12

பூநகரி கல்முனை—பூவரசந்தீவு கடற் பிராந்தியத்தில் மீன் பிடித்துக்கொண்டிருந்த மீனவர்கள் சிலர் கடற்படையினரால் கைது !செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு இச் சம்பவம் இடம்பெற்றது.

இவர்கள் பயணம் செய்த மூன்று வள்ளங்கள் நேற்று வரை கரை திரும்பவில்லை என்றும் இந்த மூன்று வள்ளங்களிலும் 10 மீனவர்கள் வரை

[6ஆம் பக்கம் பார்க்க]

## பொதுமக்களின் உடைமைகள் வீடுகள் பெருமளவில் நாசம்!

யாழ்ப்பாணம், ஜூன் 12

நேற்று முழுநாளும் வலிகாமம் வடக்கு மற்றும் மேற்குப் பகுதிகள் மீது ஸ்ரீலங்காப் படையினர் நடத்திய குண்டு வீச்சுகளினால் பொதுமக்களின் !சொத்துகள் உடைமைகள் பெருமளவில் நாசமாகின.

சுமார் 300 வீடுகள், ஆலயங்கள், பொதுநிறுவனக் கட்டடங்கள், வாகனங்கள் என்பனவும் சேதமடைந்தன.

வட்டுக்கோட்டை கிழக்கில் மாவடி — சித்தன்கேணி வீதியடியில் இந்துக் கல்லூரிக்குச் சமீபமாக நேற்றுக் காலை 6 மணிக்கு இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சில் இரு வீடுகள் சேதமடைந்தன; பயன்தரு மரங்கள் நாசமாகின; கால்நடைகள் பலியாகின, பல பொதுமக்கள் காயமடைந்தனர்.

### சுழிபுரத்தில்

சுழிபுரம் தபாலகத்துக்கு முன்னால் வீசப்பட்ட இரு குண்டுகளினால் பல வீடுகள்

[6ஆம் பக்கம் பார்க்க]

## யாழ்., கிளிநொச்சியில் தொடர்ந்து ஊரடங்கு

### மன்னார், முல்லையில் நீக்கம்

கொழும்பு, ஜூன் 12

மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் அமுலில் இருந்து வந்த ஊரடங்குச் சட்டம் நேற்று மாலை 6 மணியுடன் நீக்கப்பட்டதாக கூட்டுப்படை தலைமை அலுவலகம் அறிவித்தது.

எனினும், யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் ஊரடங்குச் சட்டம் மறு அறிவித்தல் வரை தொடர்ந்து அமுல் நடத்தப்படும் என்றும் கூட்டுப்படைத் தலைமை அலுவலகம் அறிவித்திருக்கிறது. (ஒ-எ)

## 3 முனைகளில் முன்னேற முயன்ற படையினருடன் புலிகள் கடுஞ்சமர்

### 18 இராணுவத்தினர் பலி

யாழ்ப்பாணம், ஜூன் 12

வலி வடக்குப் பகுதியில் கீரிமலை, தச்சன்காடு, கொல்லங்கலட்டி, ஆகிய மும்முனைகளிலுமிருந்து முன்னேறுவதற்கு இராணுவத்தினர் நேற்றுப் பகீரதப் பிரயத்தனம் செய்தனர்.

விடுதலைப் புலிகள் வழி மறித்துத் தொடுத்த கடும் எதிர்த் தாக்குதல்களால் படையினரின் முயற்சி முறியடிக்கப்பட்டது.

நேற்று அதிகாலை 4. 30 மணிக்கே படையினர் தமது முன்னேறும் முயற்சியை — இராணுவத் தாக்குதலை — ஆரம்பித்தனர்.

கீரிமலைப் பகுதியில் இருந்து சேந்தான்குளம் நோக்கியும், தச்சன்காட்டுப் பகுதியில் இருந்து ஆலடியை நோக்கியும், கொல்லங்கலட்டியில் இருந்து சீராவளைக் காட்டை நோக்கியும் இராணுவத்தினர் ஒரே

[6 ஆம் பக்கம் பார்க்க]

## முல்லைத்தீவுப் பகுதிகளில் அகோர குண்டு வீச்சுக்கள்

### கடும் ஷெல் வீச்சும் தொடருகிறது

யாழ்ப்பாணம், ஜூன் 12

முல்லைத்தீவில் தண்ணீரூற்று, நெடுங்கேணி, புதுக்குடியிருப்புப் பகுதிகளில் ஸ்ரீலங்காப் படையினர் கடும் குண்டு வீச்சுத் தாக்குதல்களையும், பயங்கர ஷெல் தாக்குதல்களையும் நடத்தி வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்றைய குண்டுவீச்சின் போது தண்ணீரூற்றில் சிறுவன் ஒருவன் பதுங்கு குழிக்குள் இடறி விழுந்ததில், அவனது கை முறிந்துவிட்டது. குலசிங்கம் பிரதீபன் [10 வயது] என்ற அந்தச் சிறுவன் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளான்.

தாக்குதல்கள் காரணமாக மேற்படி பகுதிகளில் இருந்து

(6ஆம் பக்கம் பார்க்க)

## நேற்றைய தாக்குதல்களில் 2,000 படையினர் களத்தில்

### மே 28க்குப் பின் குடாநாட்டில் 129 பேர் பலி

யாழ்ப்பாணம், ஜூன் 12

நேற்றைய இராணுவ நடவடிக்கைகளில் இரண்டாயிரம் படையினர் ஈடுபடுத்தப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி ஏஜன்சிச் செய்திகள் தெரிவித்தன.

இதே வேளை, பாதுகாப்புப் படையினரிடம் உள்ள ஆயுதங்கள் அனைத்தும் வட பகுதியில் விடுதலைப் புலிகளின் பலத்தைக் குறைப்பதற்குப் பயன்படுத்தப்படும் என்று நேற்று கொழும்பில் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் இராணுவப் பேச்சாளரான கேர்ணல் முனசிங்கா தெரிவித்தார்.

தெல்லிப்பழையைச் சூழவுள்ள பகுதிகளிலேயே நேற்று இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதாகவும் அவர் சொன்னார்.

யாழ்ப்பாணக் குடா நாட்டில் மே மாதம் 28 ஆம் திகதி புதிதாகத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதிலிருந்து மொத்தம் 129 படையினர் கொலையுண்டனர் என கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்ததாக ஆஸ்திரேலிய வானொலி [illegible]

## நாயாறுப் பகுதியில் எரி குண்டு வீச்சு!

### காடுகள் அழிந்து நாசம்!!

யாழ்ப்பாணம், ஜூன் 12

முல்லைத்தீவு நாயாறுப் பகுதியிலும் ஸ்ரீலங்கா விமானப் படையினர் அகோர குண்டு வீச்சுக்களை நடத்தி வருகின்றனர் என்றும்—

அங்குள்ள காட்டுப் பகுதிகளில் படையினர் எரிகுண்டுகளை வீசி வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

காடுகளில் எரிகுண்டுகள் வீசப்படுவதால் அங்குள்ள மரங்கள் எல்லாம் எரிந்து அழிந்து வருகின்றன என்றும்—

தமிழர்களுக்குச் சொந்தமான காட்டு வளங்கள் திட்டமிட்டு அழிக்கப்பட்டு வருகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது. [ஒ]

கிளிநொச்சி ஆசிரியர் இடம் மாற்றப் பட்டியல் 5 ஆம் பக்கத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைப் புலிகள் மீதான தடை இந்திய துரோகத்தின் உச்சக் கட்டம்

## பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு அறிக்கை

பாரிஸ், ஜூன் 12

தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினையில் இந்தியா தொடர்ந்தும் தமிழ் மக்களுக்குத் துரோகம் இழைத்து வருகிறது என்பது தெளிவாகத் தெரிகிறது. விடுதலைப் புலிகளை தனது நாட்டில் இந்தியா தடை செய்தது அதன் ஒரு உச்சக் கட்டம் ஆகும்.

பிரான்ஸில் உள்ள தமிழர் ஒழுங்கிணைப்புக்குழு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

இந்தியா தொடுத்த இராணுவ ரீதியான போரை தமிழ் மக்கள் எவ்வாறு முறியடித்தனரோ, அதேபோன்று ராஜதந்திர ரீதியான இந்தப் போரையும் முறியடிப்பார்கள்.

ராஜீவ் கொலையில் புலிகளின் தலைவர் பிரபாகரனைக் குற்றவாளியாக்கி நாடு கடத்துமாறு இலங்கை அரசிடம் இந்தியா கேட்டிருப்பது தமிழ் மக்களுக்கும், விடுதலைப் போராட்டத்துக்கும் எதிரான போர்ப்பிரகடனமாகவே அமைந்துள்ளது.

விடுதலைக்கு எதிராக இந்தியா செயல்படுகின்றது என்பது 1985 இல் நடைபெற்ற திம்பு மாநாட்டில் இருந்து இந்திய - இலங்கை ஒப்பந்தம் உட்பட இன்று வரை அப்பட்டமாகத் தெரிகிறது.

அண்மைக் காலமாக இலங்கை அரசுடன் சேர்ந்து அகதிகளை பலவந்தமாக திருப்பி அனுப்புவதோடு புலிகளை அழிப்பதற்கு இலங்கையுடனான இராணுவ கூட்டு குறித்து ஆலோசித்து வருவதானது இந்தியாவின் நிலைப்பாட்டை தெளிவாகக் காட்டுகின்றது.

இந்தியா புலிகள் மேல் விதித்த தடை இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கைக்கு ஆசீர்வாதம் அளித்ததுபோல் ஆகின்றது. இது தமிழ் மக்களின் அபிலாஷைகளை நசுக்கி அழி என்று சமிக்ஞை கொடுத்ததுபோல உள்ளது.

—இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஒ-த-3]

## மாதாந்த சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூன் 12

கந்தர்மடம் ஸ்ரீ சிவகுருநாத குருபீடம் வேதாந்தமடப் பரிபாலன சபையினர், ஒவ்வொரு மாதமும் வரும் பூரணை தினத்தன்று பிற்பகல் 3.30 மணிக்கு சொற்பொழிவுகளை நடத்த ஒழுங்குகளைச் செய்துள்ளனர். முதல் சொற்பொழிவு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் ''வீடும் வேண்டாநிறல்'' என்ற பொருளில் திரு. க. சொக்கலிங்கம் சொற்பொழிவாற்றுவார். [த]

## விவசாயக் கல்லூரி பரீட்சை முடிவுகள்

கிளிநொச்சி, ஜூன் 12

தற்போதைய சூழ் நிலை காரணமாக கிளிநொச்சியில் தற்காலிகமாக இயங்கிவரும் வவுனியா விவசாயக் கல்லூரியின் விவசாய டிப்ளோமா பரீட்சை முடிவுகள் அண்மையில் வெளியாகின. முதல் வகுப்பில் இருவரும், இரண்டாம் வகுப்பில் 13 பேரும், சாதாரண தரத்தில் இருவரும் சித்தியடைந்துள்ளனர். [த]

## தமிழ்த்தின விழாவும் பரிசளிப்பு விழாவும்

யாழ்ப்பாணம், ஜூன் 12

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையின் தமிழ்த்தின விழாவும், பரிசளிப்பு விழாவும் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை அரங்கில் நடைபெறும். வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. இ சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார். (த)

## உற்சவம்

தென்மராட்சி, ஜூன் 12

கிளாலி புனித அந்தோனியார் கோயில், கரவெட்டி புனித அந்தோனியார் கோயில் நவநாள் உற்சவத் திருநாள் நாளை சனிக்கிழமை நடைபெறும்.

## கிராம சேவை அலுவலர் பரீட்சை நிலையம் மாற்றம்

யாழ்ப்பாணம் ஜூன் 12

கிராம சேவை அலுவலர்களைத் தெரிவு செய்வதற்கான பரீட்சை நடைபெறும் பரீட்சை நிலையங்கள் சில மாற்றம் செய்யப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வேலணை சேர். வைத்திலிங்கம் துரைசாமி ம. ம. வியில் நடைபெற இருந்த பரீட்சை யாழ். வேம்படி மகளிர் கல்லூரியிலும் —

நெடுந்தீவு மகா வித்தியாலயம், ஊர்காவற்றுறை சென். மேரிஸ் றோ. க. பெண்கள் பாடசாலையிலும் — நடைபெற இருந்த பரீட்சை யாழ் இந்துக் கல்லூரி மண்டபம் 2 இலும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இப் பரீட்சை நாளை 13 ஆம் திகதி நடைபெறவிருப்பது தெரிந்ததே

மேலும் இப் பரீட்சைக்குரிய வினாத்தாள்கள் பொதிகள் பலாலி விமானத்தளத்தில் உள்ளன. செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு மூலம் இவற்றைக் எடுத்துவருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன.

அதே சமயம் பண்டத்தரிப்பு மருதனார் மட கல்விக் கோட்டங்களில் அமைந்திருக்கும் பரீட்சை நிலையங்களை யாழ். நகரப் பாடசாலைகளுக்கு இடம் மாற்றவும் முயற்சிக்கப்படுகிறது.

இக் கோட்ட பரீட்சார்த்திகள் நாளைய பத்திரிகைகளில் பரீட்சை நிலைய மாற்றங்கள் பற்றிய அறிவித்தலைப் பார்க்குமாறு கோரப்பட்டுள்ளது.

மேலும் பண்டத்தரிப்பு, மருதனார் மட கோட்டங்களுக்கு ஒப்படைக்கப்பட்டு விநியோகிக்கப்படாத அனுமதி அட்டைகள் இன்று யாழ். கல்வித் திணைக்களத்தில் விநியோகிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. [இ]


## கே. எஸ். ஆர். போட்டோஸ்

### திறப்பு விழா அழைப்பு

அன்புடையீர் ஆங்கிரச வருஷம் வைகாசி மாதம் 30 ஆம் திகதி (12-06-92) இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 8.30 மணி தொடக்கம் முற்பகல் 9.30 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் யாழ்ப்பாணம் கே. கே. எஸ். வீதி, தட்டாதெருச் சந்தியில், 667 ஆம் இலக்கத்தில்

★ கே. எஸ். ஆர். போட்டோஸ் ★

என்னும் புதிய ஸ்தாபனத்தை ஆரம்பித்து நடத்த நிச்சயித்திருப்பதால் அத்தருணம் நண்பர்கள், வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் சமுகம் தந்து ஆதரவு நல்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றேன். நன்றி

இல 12 A, கந்தப்புராண வீதி, கந்தர்மடம்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை விரும்பும்
க. சவுந்தரராஜ்

(21370)


## அரசாங்க அறிவித்தல்

### சுகாதார சேவைகள் திணைக்களப் சுருக்கெழுத்தாளர் பதவி

சுகாதார சேவைகள் பணிமனையில் அமைய ஆங்கில சுருக்கெழுத்தாளர் பதவிக்கு கீழ்க்காணும் தகைமைகளையுடைய ஆண் / பெண் இருபாலாரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ 19-06-92 ஆம் திகதி அல்லது அதற்கு முன்பாகவோ இப்பணிமனையில் கிடைக்கக்கூடியதாகச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**தகைமைகள்:**

01. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
02. வயது:- 18 இற்கும் 40 இற்கும் உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
03. சிரேட்ட பாடசாலை தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கில பாடத்தில் குறைந்தது விசேட சித்தியுடன் தமிழ் மொழி, கணிதம் உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்,
04. சுருக்கெழுத்து நிமிடமொன்றுக்கு 75 சொற்களிற்குக் குறையாமலும், தட்டச்சு வேகம் நிமிடமொன்றிற்கு 35 சொற்களிற்குக் குறையாமலும் இருத்தல் வேண்டும்.

**வேதனம்:**

நாளொன்றிற்கு ரூபா 55-20 வழங்கப்படும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கும் செய்முறைப் பரீட்சைக்கும் தோற்றுதல் வேண்டும்.

சுருக்கெழுத்தாளராக அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்றவர்களுடைய விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்படும்.

டாக்டர் பொ. இரத்தினசபாபதி
சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்.

சுகாதார சேவைகள் பணிமனை,
இல. 57, விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம்.
13-06-92.

[ப/2677]


## விலங்கியல்

R. ஈஸ்வரதாசன்
B. Sc. (Cey.)

**94 A/L**
புதிய பிரிவு III
ஆரம்பம்:
13 — 06 — 1992
சனி 1-30 p. m.
Sat Sun — 1-30 p. m.

**92 A/L**
Model Question Paper - 92
ஆரம்பம்:
13 — 06 — 1992
சனி 5 15 p. m.
Sat. Sun — 5.15 p. m.

Personal Science Centre
Jaffna.

[சி-2676]


## மரண அறிவித்தல்கள்

### திருமதி நாகம்மா கனகசெந்திநாதன்

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், உரும்பிராயில் வசித்தவருமாகிய திருமதி நாகம்மா கனகசெந்திநாதன் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற பிரபல எழுத்தாளர் இரசிகமணி கனகசெந்திநாதனின் மனைவியும், சத்தியதேவி, தேவராணி [பல் வைத்தியர், யாழ். போதனா வைத்தியசாலை], குகானந்தன் [கணக்காளர், தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம்] ஆகியோரின் தாயாரும், பாலசுப்பிரமணியம் [இ. போ. ச. கோண்டாவில்], செல்வரத்தினம் [காகிதத் தொழிற்சாலை, வாழைச்சேனை] றெஜினா, தேவஜெயந்தி ஆகியோரின் மாமியாரும், தீபா, செந்தூரன், ஆரூரன், றூபா, சோபா, பிரியந்தி, டானியல் சுஜீவ் செந்திநாதன், றோணி, சஞ்சீவ், வெறோணிகா, குகானந்தி ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரின் மரணச் சடங்கு [12-06-92] இன்று காலை 10 00 மணிக்கு உரும்பராய், அன்னை பூபதி கலையரங்குக்கு அருகாமையிலிருக்கும் முன் ஒழுங்கையில் உள்ள இல்லத்தில் நடைபெறும்.

குரும்பசிட்டி,
தெல்லிப்பழை.

தகவல்:
தி. குகானந்தன் [மகன்]

[21372]

### தியாகராசா சுந்தரலட்சுமி

வேலணையைப் பிறப்பிடமாகவும் மண்கும்பானை வதிவிடமாகவும் கொண்ட தியாகராசா சுந்தரலட்சுமி காலமானார். அன்னார் காலஞ்சென்ற கணேசையா தியாகராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மகளும், பத்மதேவி, சத்தியதேவி, பாலசிங்கம், நிர்மலாதேவி, தர்மலிங்கம், இராசலிங்கம், விமலாதேவி, விஜயகுமார், சந்திரகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும் சேதுகாவலர், சண்முகநாதன், தளையசிங்கம், சதாசிவநாயகம், பார்வதாதேவி, இன்பவதனி, சறோசினிதேவி, ரஞ்சனாதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும், செல்லையாபிள்ளை நகுலாம்பிகை, சௌபாக்கியலட்சுமி, காலஞ்சென்ற குலசேகரம்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 11-6-1992 அன்று இல 541/3 காலி வீதி வெள்ளவத்தையில் பிற்பகல் இரண்டு மணிக்கு நடைபெற்றன என்பதை அறியத் தருகிறோம்.

தகவல்:
தி. சந்திரகுமார் [மகன்]

[21364]

### மாணிக்கம் தங்கவடிவேல்

அல்வாய் ''தங்கத்தாமரை''யைச் சேர்ந்த மாணிக்கம் தங்கவடிவேல் [ஓய்வுபெற்ற T. O. பெருந்தெருக்கள் திணைக்களம்] 11-06-92 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திருச்சியால் மாணிக்கம் பொன்னம்மா ஆகியோரின் மகனும், சிவபதியம்மாவின் அன்புக் கணவரும், ஜெயந்தினி, ராஜினி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஆவார். அவரது இறுதிக் கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை 11.00 மணிக்கு பங்கு வேம்படி மயானத்தில் நடைபெறும்.

தகவல்:
ந. மகேந்திரராஜன் [மருமகன்]
[போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்]

[21371]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைப் புலிகள் மீது தடை:

# சுவிஸில் கண்டன ஊர்வலம்

பேர்ண், ஜூன் 12

விடுதலைப் புலிகள் இயக்கத்தை இந்தியா தடைசெய்திருப்பதைக் கண்டித்து சுவிற்சர்லாந்து நாட்டின் தலைநகரான பேர்ண் மாநகரில் எதிர்வரும் 15ஆம் திகதி திங்கட்கிழமை கண்டன ஊர்வலம் ஒன்று நடைபெற இருக்கின்றது.

சுவிஸ் தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பு இந்த ஊர்வலத்தை ஏற்பாடு செய்துள்ளது.

பேர்ணிலுள்ள நாடாளுமன்றத்துக்கு முன்பாக அன்றைய தினம் பிற்பகல் 1-30 மணிக்கு ஆரம்பமாகும் மேற்படி ஊர்வலம் அங்குள்ள இந்தியத் தூதரகத்தைச் சென்றடைந்து, தூதரக அதிகாரிகளிடம் ஆட்சேப மனு ஒன்றைக் கையளிக்கும்.

இதே வேளை—

புலிகள் மீதான தடை தொடர்பாக இக் கூட்டமைப்பு அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இந்தியா தனது வல்லாதிக்க நலன்களைப் பேணவே புலிகள் அமைப்பை இந்தியாவில் தடைசெய்துள்ளது. சுயநிர்ணய உரிமையை வென்றெடுப்பதற்கான போராட்டம் எமது தாயகத்திலே நடந்துகொண்டிருக்கிறது. ஆனால் தெற்காசிய பிராந்தியத்தில் அதி முக்கிய சக்தியான இந்தியா தனது வல்லாதிக்க நலன்களைப் பேணுவதற்காக மேற்கொள்ளும் முடிவுகள் இலங்கைத் தமிழர்களின் தேசிய நலன்களுக்கு குந்தகமாகவே அமைகின்றன.

இந்த வரிசையில் அண்மையில் இந்திய அரசானது புலிகள் இயக்கத்தை உத்தியோகபூர்வமாக தடைசெய்து மீண்டும் தனது சுயரூபத்தினை அம்பலப்படுத்தி உள்ளது. இந்திய அரசின் இந்த நடவடிக்கையைக் கண்டிப்பது ஒவ்வொரு தமிழ்த் தேசிய முற்போக்கு சக்திகளினதும் கடமையாகும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [த-3]

## ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை ஆகஸ்ட் 1இல் ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 12

ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சை எதிர்வரும் ஆகஸ்ட் முதலாம் திகதி ஆரம்பமாகும். இது 25ஆம் திகதி வரை நடைபெறும்.

இந்தப் பரீட்சைக்கு 1 லட்சத்து 60 ஆயிரம் வரையான பரீட்சார்த்திகள் தோற்றுவர். இவர்களுக்கான பரீட்சைப் பிரதேச அட்டவணைகள் அடுத்த மாதம் 20 ஆம் திகதி முதல் அனுப்பி வைக்கப்படும்.

பாடசாலைப் பரீட்சார்த்திகளுக்கான அட்டவணைகள் பாடசாலை அதிபர்களுக்கும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான அட்டவணைகள் அவர்களின் விலாசங்களுக்கும் அனுப்பி வைக்கப்படும். [த]

## பயணிகள் அனுமதிக்கப்பட்டனர்

கொழும்பு, ஜூன் 12

ஊரடங்குச் சட்டம் வட பகுதியில் அமுலுக்கு வந்த அன்று தாண்டிக்குளம் ஊடாக வவுனியாவுக்கு வட பகுதியில் இருந்து பயணிகள் வந்தனர் என்றும்—

வவுனியாவில் இருந்து வட பகுதிக்கு பயணிகள் செல்ல அனுமதிக்கப்பட்டனர் என்றும்— கொழும்புச் செய்தி தெரிவித்தது.

[த எ]

## "எதிர்ப்பு இரைச்சல்" போராட்டம்:

## அடுத்த மாத ஆரம்பத்தில் சுதந்திரக் கட்சி நடத்தும்

அரசுக்கு எதிரான 'எதிர்ப்பு இரைச்சல்'' போராட்டத்தை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அடுத்த மாதம் முதலாம் திகதி நடத்தும் என்று அம்பாந்தோட்டை எம். பி. மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அன்றைய தினம் நண்பகல் 12-35 மணி முதல் 15 நிமிடங்களுக்கு இந்த இரைச்சல் ஒலிகள் மேற்கொள்ளப்படும். கார்கள் "ஹோர்ன்'' ஒலியை எழுப்பும். சைக்கிளில் செல்வோர் மணியை ஒலிப்பர். குடும்பத் தலைவியர் சமையல் பாத்திரங்கள் மூலம் ஒலி எழுப்புவர்.

இது தொடர்பாக பாதுகாப்பு படையினரின் ஒத்துழைப்பையும் சுதந்திரக்கட்சி கோர உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகள் அரசுக்கெதிரான நாடளாவிய ரீதியில் "எதிர்ப்பு இரைச்சல்'' எழுப்பும் போராட்டத்தை நடத்த திட்டமிட்டுள்ளமை தெரிந்ததே. [த-3]


சாக்கு, பொலித்தீன் பை விற்பனை

கழிவுச் சாக்குகள், பொலித்தீன் பைகள் விற்பனைக்குண்டு. கொள்வனவு செய்ய விரும்புவோர், சங்கத்தில் பொருள்களைப் பார்வையிட்டு 1992-06-18ஆம் திகதி பிற்பகல் 4-00 மணிக்கு முன்னர் கூறு விலையைச் சமர்ப்பிக்கவும்.

யாழ். மாவட்ட-
அபிவிருத்திக்கூட்டுறவுச்-
சங்கம்,
கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

[சி-2109]


## அடுத்த சில தினங்களில் பாரிய ராணுவ நடவடிக்கை

கொழும்பு, ஜூன் 12

அடுத்த சில தினங்களுக்குள் வடக்கில் மீண்டும் பாரிய இராணுவ நடவடிக்கை இடம் பெறவிருப்பதாகவும்—

இது தொடர்பாக முப்படை உயர் அதிகாரிகள் பலாலி இராணுவ முகாமில் தங்கி இருந்து திட்டமிட்டு வருவதாகவும் 'த ஐலண்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

தற்போது வடக்கில் உள்ள ஊரடங்குச் சட்டம் இன்னும் சில தினங்கள் நீடிக்கும் என்றும் அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


உ
சிவமயம்

திருமண அழைப்பு

மணமகன்:- சி. பாலபாஸ்கர சர்மா
மணமகள்:- இ. கோமளா
காலம்:- 13-06 1992 சனிக்கிழமை
இடம்:- வீரபத்திர கோவிலடி, உடுப்பிட்டி.

ஈஸ்வர கிருபையால் நிகழும் திருமண வைபவத்துக்கு சகலரும் சமுகம் தந்து, மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நல்வரவை நாடும்:
ப்ரம்ஹஸ்ரீ சொ. இரத்தினசபாபதிக் குருக்கள் குடும்பத்தினர்.

வரவேற்பாளர்கள்:-
ப்ரம்ஹஸ்ரீ பாஸ்கரசர்மா — காஞ்சனா.

வீரபத்திர கோவிலடி,
உடுப்பிட்டி.

[21363]


யாழ். மாநகரசபை

## பொது அறிவித்தல்

### உயர்தொழில்கள் மீதான வியாபார வரி-1992

கீழ்க்காட்டப்படும் உயர்தொழில்கள் சம்பந்தமாக 31-12-1991 இல் முடிவடைந்த ஆண்டுக்கான பெறுகைகள் பற்றிய விவரத்திரட்டுக்கள் 30-06-1992க்கு முன் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதனை மாநகர சபைகள் கட்டளைச் சட்டம் அத்தியாயம் 252 பிரிவு 247 [சி]ன் கீழ் இத்தால் தெரிவித்துக்கொள்கின்றேன். அத்துடன் ஒவ்வொரு நிறுவன உரிமையாளர்களும் தமது பெறுகைகள் பற்றிய காசுப் பற்றுச்சீட்டுப் பிரதிகள், காசேடு ஆகியவற்றை, இவற்றைப் பரிசோதனை செய்ய வரும் எமது வருமானப் பரிசோதகர்களிடம் காண்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். பதிவேடுகள், ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாத பட்சத்தில் உச்ச வரி விதிக்கவேண்டியேற்படும் என்பதனை குறிப்பிடுவதுடன், இவ்விடயங்களில் நிறுவன உரிமையாளர்களை எம்முடன் ஒத்துழைக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

1. முதல் வழங்குனர்
2. கடன் வழங்குனர்
3. தனியார் கல்வி நிலையங்கள்
4. ஒப்பந்தகாரர்
5. தரகுமுகவர்
6. வைத்திய ஆலோசனைச் சேவை
7. தனியார் மருந்தகம்
8. தனியார் வைத்தியசாலை
9. ஆயுர்வேத வைத்தியசாலை
10. நில அளவையாளர் [உத்தரவுபெற்ற]
11. லொறி போக்குவரத்து
12. வரி ஆலோசகர்
13. விளம்பர முகவர்
14. தொழில் முகவர்
15. தனியார் பாதுகாப்பு சேவை
16. பல் வைத்தியர்
17. கணக்காய்வாளர்
18. கணக்காளர்
19. பிரயாண முகவர்
20. கட்டடப் பொறியியலாளர்
21. வரைபடவியலாளர் [கட்டடக்கலை]

மாநகர ஆணையாளர்,
யாழ். மாநகரசபை.

09-06-1992. [கி-2107]


உ
முருகன் துணை

திருமண அழைப்பு

அன்புடையீர்,
நிகழும் ஆங்கீரச வருஷம் வைகாசித் திங்கள் 30ஆம் நாள் (12-6-92) வெள்ளிக்கிழமை காலை 8-11 மணி தொடக்கம் 8-59 மணிவரை வரும் சுபமுகூர்த்த சுப வேளையில்,

புளியங்கூடல்
திருமதி பொன்னம்பலம்
அவர்களின் கனிஷ்ட புத்திரன்
கோணேசலிங்கம்
(உரிமையாளர் — அலங்கார் ஆபரண மாளிகை, யாழ்ப்பாணம்)
அவர்கட்கும்

நல்லூர்
திரு. திருமதி செல்லையா
தம்பதிகளின் கனிஷ்ட புத்திரி
கோகுலநாயகி
அவர்கட்கும்

திருவருள் துணைகொண்டு திருமணம் செய்யப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு திருமணம் மனோன்மணி அம்மன் கோயில் வீதி இல்லத்தில் நடைபெற இருப்பதால், அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை விரும்பும்

திருமதி பொன்னம்பலம்
171/10, கோவில் வீதி,
நல்லூர்.

திரு. திருமதி செல்லையா
171/10, கோவில் வீதி,
நல்லூர்.

(21359)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பென்ரம் (Bantam) பாமாஸ் (Bhamas) கோழிகள் விற்பனைக்குண்டு. பதினொரு மாதம் முதல் பதின்மூன்று மாதங்கள் நிரம்பியவை. முட்டை இட்டுக் கொண்டிருப்பவை. தொடர்பு கொள்ளவும்: கிவீ படப்பிடிப்பாளர்கள், 131/1, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம்.

[21366]

### கோழிக்குஞ்சு விநியோகம்

Golden Comet சிவப்புப் பேட்டுக்குஞ்சுகள் உடன் பெற்றுக் கொள்ளலாம். Nallur Farm Centre, இல, 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர்.

[21365]

### கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு

கோலடன் கொமெற் பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. ஓடருக்கும் எடுத்துக் கொடுக்கப்படும். காலை 6-00 மணி தொடக்கம் 11-00 மணி வரை. தொடர்பு கொள்ளவும். ரவி றேடர்ஸ், பழக்கடை, திருநெல்வேலிச் சந்தி.

[21339]

### தவறிவிட்டது

31-05-92 அன்று யாழ். இந்துக் கல்லூரி சுற்றாடலில் 512334547V இலக்க அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 29/1, கடைச்சாமி வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

[21362]

### தேவை

எமது நிறுவனத்தில் கடமையாற்ற பெண் இலிகிதர் தேவை. விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். North Ceylon Technical Institute, 14, st. Peter's Lane, Jaffna.

[சி-2674]

### மணப்பெண்கள் தேவை

இந்து, செவ்வாய்க் குற்றமற்ற 29 வயது அரசாங்க எழுதுவினைஞருக்கும், பட்டதாரி ஆசிரியருக்கும், கத்தோலிக்க அரசாங்க ஊழியருக்கும், கனடாவில் வேலை செய்யும் 34, 36, 38 வயதுள்ள கத்தோலிக்கருக்கும் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம்.

[21360]

### மணமகன் தேவை

குற்றமற்ற 27 வயது ஆசிரியைக்கும், 37 வயது பட்டதாரிக்கும், சைவபோசன 35 வயது பட்டதாரிக்கும், 32 வயது கத்தோலிக்க, வேலை செய்யும் பெண்ணுக்கும் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம்.

[21361]

### இலவச திருமண சேவை

36 வயது, சதயம், செவ்வாய் - 7, சைவ போசன ஆசிரியைக்கு ஏற்ற அரச, தனியார்துறை மணமகன் தேவை. தொடர்பு ஞாயிறு காலையில் மட்டும். து. விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி.

[4741]

38 வயது, ஆயிலியம், செவ்வாய் 4, ஆசிரியைக்கு ஏற்ற அரச தனியார்துறை மணமகன் தேவை. பல மதங்களில், தரங்களில் மணமக்கள் உண்டு. து. விமலா, யாழ்/ நாச்சிமார் கோவிலடி.

[4740]

## மிதிவெடியில் சிக்கினர்

மட்டக்களப்பு, ஜூன் 12

கல்முனைக் குடி - தீவு வெட்டை என்ற இடத்தில் இரு விவசாயிகள் வயல் பகுதிக்குள் வைக்கப்பட்டிருந்த மிதி வெடியில் சிக்கி காயம் அடைந்தனர். [த]


## ஆரம்பம்

13-06-1992 சனி

94 மீதித் தேற்றம்
Sat. & Sun. 8 — 9-30

94 நேர்கோட்டு இயக்கம்
Sat. & Sun 9-30—10-45

93 வகையீடு
Sat. & Sun. 11-00—12-30

93 மூட்டிய கோல்
Sat. & Sun. 12-30—2-00

93 தொடர்
Sat. & Sun. 3-30—5-00

93 தொடர்பு வேகம்
Sat. & Sun. 5-00—6-30

ஆசிரியர்
Mr. கணேசன்
B.Sc. (Hons.)

92 துரித மீட்டல் ஓட்ட மின்னியல்
Sat. & Sun. 11-00—12-00

ஆசிரியர்:
Mr. ஜெயசீலன்
B Sc. (Hons.)

'A' Level Centre,
Point - Pedro Road, 1St Lane, Jaffna.

(சி-2670)



## பிரிவு II

SPOKEN ENGLISH WITH GRAMMAR

திங்கள் } 2-30 p. m.
வெள்ளி }

திரு. M.A. ஹரி
B. A. (Hons)
(Dip - in - Eng.)

★ ஆங்கிலத்தில் தெளிவான இலக்கண பிழையின்றி சரளமாக உரையாடக் கூடிய முறையில் கற்பிக்கப்படும்.

★ எண்ணிக்கை கட்டுப்படுத்தப்பட்டுள்ளதால், ஒவ்வொரு மாணவர்மீதும் தனிக் கவனம் செலுத்தப்படும்.

BOND Institutes,
58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

[4753]



## Wanted Trainee Teacher for Short - Hand Typing (English)

எமது கிளை நிறுவனத்தில் கடமை ஆற்ற துணை ஆசிரியை கோப்பாய் உதவி அரசாங்க பிரிவில் வசிப்பவர் தேவை.

விவரங்களுடன் விண்ணப்பிக்கவும்:
North Ceylon Technical Institute,
14, St. Peter's Lane, Jaffna.

[சி-2675]



## மீண்டும்

# வினா விளக்கம்

அனேக மாணவர்களின் வேண்டுகோளுக்காகவும், மாணவர்களின் குழப்ப நிலையை நீக்குவதற்காகவும் முன்னர் கூறிய விளக்கத்தை மீண்டும் விளக்குகிறேன்.

பொருளியல் - உதயன்

A/L 1991

விசேட பரீட்சையில்
தேசிய செலவு கணிப்பதன் விளக்கம்.

ECALOM


மனோகராச் சந்தி, யாழ்ப்பாணம்.

★ எவரும் கலந்து கொள்ளலாம். முன்னர் பரீட்சை எடுத்த மாணவர் உட்பட.

★ செவ்வாய் - மாலை 5 மணி.

[4756]


## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### கந்தையா வேலுப்பிள்ளை

(முன்னாள் யாழ். மாவட்ட தொலைத் தொடர்பு-பொறியியலாளர்)

தோற்றம்: 17—02—1940

மறைவு: 21 - 05—1986

திதி; 12 — 06 — 1992

அன்பின் திருவுருவே! பண்பின் உறைவிடமே! பாசத்தின் இருப்பிடமே! குடும்பத்தின் குல விளக்கே! எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு, மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புத் தந்தையே! நீங்கள் எம்மைப் பிரிந்து இன்றுடன் ஆறு ஆண்டுகள் பூர்த்தியாகி விட்டாலும், உங்கள் அன்பு முகம் ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும் மறையவே மறையாது. தங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

"வேல் அகம்",
குருக்கட்டு, சரணவாய் தெற்கு,
கரவெட்டி.

[4783]


## தொழிலாளர் கல்விச் சான்றிதழ் நெறி முதல் அரையாண்டு பரீட்சை - 1991

மேற் குறிப்பிட்ட பரீட்சை ஜூன் மாதம் 27ஆம், 28ஆம் திகதிகளிலும் ஜூலை மாதம் 4ஆம், 5ஆம் திகதிகளிலும் நடைபெறும்.

மீள் பரீட்சார்த்திகள் பரீட்சையில் பெறப்பட்ட விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து தகுந்த கட்டண பற்றுச்சீட்டுடன் 19-06-1992க்கு முன்பாக சமர்ப்பிக்கவும்.

பரீட்சை அனுமதி அட்டையை 24-06-1992 அன்று பரீட்சை கிளையில் பெற்றுக்கொள்ளவும்.

— பதிவாளர்.

[சி-2110]



## Practice Makes One Perfect

ஆண்டு - 5
(புலமைப் பரிசில் - 92)

அடுத்த பயிற்சிப் பரீட்சை
14 - 06 - 1992

ஒவ்வொரு மாதத்தின் 2ஆவது, 4ஆவது ஞாயிற்றுக்கிழமைகளில் பி. ப. 1-00 மணிக்கு இந் நிறுவனங்களில் நடத்தப்படும்.

இந் நிறுவனங்களில் கல்வி கற்கின்ற, கற்காத அனைத்து மாணவர்களும் பங்குபற்றலாம். பரீட்சையில் தோற்ற வசதியில்லாதவர்கள் வினாத்தாள்களுக்கு விடையளித்து தந்தால் இலவசமாகத் திருத்திக் கொடுக்கப்படும்.

★ Bond — யாழ்ப்பாணம்
★ Express — இருபாலை
★ Selin — கோப்பாய்
★ Pearl — நீர்வேலி
★ Kugan — ஆவரங்கால்
★ Satha Pons — வடமராட்சி
★ Brilliant — தென்மராட்சி
★ Vinyls — சுன்னாகம்
★ National — பண்டத்தரிப்பு
★ Paarathy — சித்தன்கேணி
★ Bitsmans — மானிப்பாய்
★ Keen — திருநெல்வேலி
★ Radiant — அரியாலை
★ Vinayahar — ஆனைக்கோட்டை
★ Lucky — சண்டிலிப்பாய்
★ Y. M. C. A. — பருத்தித்துறை

விபரங்களுக்கு:
Examination Unit,
BOND Institutes,
யாழ்ப்பாணம்.

[4752]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் கிளை நூலகம்
யாழ்ப்பாணம்



## உதயன்

### புதியதொரு வட்டமா?

ஈழம் போர் இரண்டின் இரண்டாம் ஆண்டு பூர்த்தியை அண்டி, ஸ்ரீலங்கா அரச படையினர் தங்கள் தாக்குதல்களைத் தீவிரமாக்கியுள்ளனர். போர் ஆரம்பமான முதல் அரை ஆண்டு காலத்தில் உக்கிரமாகவும், கோரத்தனமாகவும் நடந்து கொண்டது போல இப்போது மீண்டும் அட்டூழியம் புரியத் தொடங்கி உள்ளனர். பொதுவாக வடக்கிலும், குறிப்பாகக் குடாநாட்டிலும் ஆரம்ப கால மூர்க்கத்தனத்தை கடந்த சுமார் பத்துப் பன்னிரண்டு நாட்களாக அவர்கள் காட்டி வருகின்றனர்!

அவர்களது அட்டூழியத்துக்கும், தீவிரத்துக்கும், மூர்க்கத்தனத்துக்கும் அப்பாவித் தமிழ் மக்களே பலியாகி வருகிறார்கள் கோவில்கள் மற்றும் அகதி முகாம்கள், பொது மக்களின் குடியிருப்புகள் என்பன சேதமடைந்து சின்னாபின்னமாகின்றன.

நாளாந்தம் தமது தாக்குதல் பிரதேசங்களை அதிகரிப்பதன் மூலம், அகலமாக்குவதன் மூலம் அதிக எண்ணிக்கையான தமிழ்ப் பொதுமக்களைக் கொல்லலாம். அதிகளவு தமிழ்ப் பிரதேசங்களை உருச்சிதைத்து விடலாம்; அதன் மூலம் தமிழர்களுக்குப் பொருளாதார நட்டத்தையும் பின்னடைவையும் உண்டாக்கலாம் —

பொதுமக்களுக்கு உயிர்ச் சேதமும் உடைமைச் சேதமும் உண்டாக்குவதுடன் அவர்களை இடம் பெயரவும் வைப்பதால் மக்கள் மனதில் போராட்டத்தின் மீது வெறுப்புணர்வை உண்டாக்கலாம் — இப்படி ஒரு திட்டத்துடனேயே, ஆரம்ப காலத்தைப் போன்று பரவலான குண்டு வீச்சுத் தாக்குதல்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன!

கடந்த இரண்டு வருடங்களாக ஸ்ரீலங்காப் படையினர் தமது இராணுவ நடவடிக்கையில் ஒரு வட்டத்தைச் சுற்றி, மீண்டும் ஆரம்பப் புள்ளியில் வந்து நிற்கின்றனர். முதலாவது சுற்றின்போது விடுதலைப் புலிகளை அவர்கள் நினைத்தது போல ஒழிக்க முடியவில்லை. அவர்களை பலவீனப்படுத்தத் தானும் இயலவில்லை.

அது போலவே பொதுமக்களைக் கொல்வதன் மூலமும், உடைமைச் சேதங்களை உண்டாக்குவதன் மூலமும் தமிழர்களைப் போராட்டத்திலிருந்து விலகிப் போகச் செய்யமுடியவில்லை. அதற்குப் பதிலாக அவர்கள் மேலும் போராட்டத்துடன் நீக்கமற நெருங்கி விட்டார்கள்; ஒன்றித்து விட்டார்கள்!

இந்த உண்மையான காட்சியைக் காண அரசாங்கத்தின் கண்கள் மறுக்கின்றன. சரியான நிலைமையைப் புரிந்து கொள்ளாமல் மீண்டும் ஒரு வட்டத்தைப் போட்டு பழைய தளத்தின் மீதே நடக்கப் பார்க்கிறார்கள்.

இராணுவத்தைக் கொண்டு இவ்வாறு எத்தனை வட்டங்களைப் போட்டாலும் இராணுவத் தீர்வு எந்த விதத்திலும் பயன்தரப் போவதில்லை என்பதை அரசு எப்போது உணரப் போகிறது?

அரசின் இராணுவத் தீர்வுக்குரிய வட்டங்கள் பெருகப் பெருக தமிழ் மக்களின் விடுதலை உணர்வு உச்சத்துக்குப் போகும். அடக்குமுறைக்கு எதிராகப் போராடுவதற்கான பலம் மேலும் திண்மை பெறும். இதனை உணர்ந்து கொள்வதற்கு அரசுக்கு இன்னும் எத்தனை காலம் பிடிக்குமோ தெரியவில்லை!

# மிகப் பெரிய செலவுடன் யுத்தம்; அளவுக்கு அதிகமான இராணுவம்!

**ஸ்ரீலங்கா அரசாங்கத்தின பாதுகாப்புச் செலவு மேன்மேலும் உயர்ந்து செல்வது குறித்து வெரித்தாஸ் வானொலி 27 - 05 - 1992 இல் புள்ளி விவரங்களுடன் கூடிய கட்டுரை ஒன்றை ஒலிபரப்பியது.**

**'இன்ரநஷனல் டிவென்ஸ் றிவியு', ''என்சைக்கிளோபீடியா'' மற்றும் சஞ்சிகைகள், பத்திரிகைகளில் இருந்து திரட்டிய தரவுகளை அடிப்படையாக வைத்து அந்தக் கட்டுரை எழுதப்பட்டிருந்தது.**

**அக்கட்டுரையின் தொகுப்பை இங்கே தருகிறோம்**

எந்த ஒரு நாட்டுக்குமே முதலில் அதனிடம் இருக்கும் விதம்விதமான நவீன ஆயுதங்களை விட அந்த நாட்டில் உள்ள இராணுவ வீரர்களின் எண்ணிக்கையே மிகப் பெரிய பலம்; முதுகெலும்புங் கூட, அந்த வகையில் சுமார் 85 கோடி மக்களைக் கொண்ட இந்தியாவில் உள்ள இராணுவத்தினரின் எண்ணிக்கை சுமார் 12 லட்சம் எனப்படுகிறது

ஆனால் சுமார் ஒன்றரைக் கோடி மக்களை மட்டுமே கொண்ட இலங்கையில் உள்ள இராணுவத்தினரின் எண்ணிக்கை சுமார் ஒரு லட்சம் என்று தெரிகிறது.

ஆதாவது, இந்தியா உலகில் 4 ஆவது மிகப்பெரிய இராணுவத்தைக் கொண்ட நாடு. சீனா, பாகிஸ்தான் ஆகிய எதிரி நாடுகளை பக்கத்தில் வைத்துள்ள இந்தியாவே 12 லட்சம் இராணுவத்தினரை வைத்துள்ளது. இலங்கையை மக்கள் தொகை அடிப்படையில் இந்தியாவுடன் ஒப்பிட்டால் இலங்கை சுமார் 20 ஆயிரம் பேர் கொண்ட இராணுவத்தையே வைத்து இருக்க வேண்டும்

**ஒரு லட்சம் படையினர்**

ஆனால் 1991 ஆம் ஆண்டின் கணக்குப்படி, இலங்கையின் முப்படைகளையும் சேர்ந்த படையினரின் எண்ணிக்கை ஒரு லட்சம் எனப்படுகிறது.

விவரம் வருமாறு:-

தரைப்படை — 80 ஆயிரம் பேர்.

கடற் படை — 14 ஆயிரம் பேர்.

விமானப் படை — 6 ஆயிரம் பேர்.

இவர்களைத் தவிர சுமார் 56 ஆயிரம் பேர் கொண்ட இன்னொரு படையும் இலங்கையிடம் உண்டு

விசேட அதிரடிப் படையில் 5 ஆயிரம் பேர் இருப்பதாக கணக்கிடப்படுகின்றது.

பொலீஸ் படை — 28 ஆயிரம் பேர்

தேசிய துணைப் படை — 10 ஆயிரம் பேர்

அரசு ஆதரவுடன் இயங்கும் ஊர்காவற்படை, ஆயுதம் தரித்த தொண்டர்படை, ரிசர்வ் படை ஆகியன எல்லாம் சேர்த்தே 56 ஆயிரம் என்று கணக்கிடப்பட்டுள்ளது ஆகமொத்தம் சுமார் ஒரு லட்சம் இராணுவத்துடன் மற்றும் 56 ஆயிரம் பொலீஸ், பாரா படையினர் என்று சுமார் ஒன்றரை லட்சம் படையினர் பலம் அரசுக்குச் சொந்தமாக உள்ளது

**ஆச்சரியமான வளர்ச்சி**

இலங்கை இராணுவம் இவ்வளவு பெரிதாக வளர்ச்சி அடைந்தது எப்படி என்பதை ஆராய்ந்தால் ஆச்சரியம் தான் ஏற்படுகின்றது

1983 ஆம் ஆண்டில் இலங்கையில் 15 ஆயிரம் பேர் கொண்ட இராணுவமே இருந்தது. 8 வருடங்கள் கழித்து அது ஒரு லட்சமாக அதிகரித்தது நம்ப முடிகின்றதா? குறிப்பாக 1990, 1991 என்ற அண்மைக் காலத்தில் தான் விமானப்படை, கடற்படை ஆகிய இரு பிரிவுகளும் விரிவுபடுத்தப்பட்டன.

1989 ஆம் ஆண்டு காலகட்டத்தில் தரைப்படையினரின் எண்ணிக்கை சுமார் 40 ஆயிரம் ஆக இருந்தது. கடந்த இரண்டு ஆண்டுகளில் அந்த எண்ணிக்கை இரண்டு மடங்காக 80 ஆயிரமாக அதிகரிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரை எதிர்கொள்ள இலங்கை அரசுக்கு அதிக மனித சக்தி தேவைப்படுவதையே இது காட்டுகின்றது.

அது போன்று 1988, 89 ஆம் ஆண்டுகளில் கடற்படை வீரர்களின் எண்ணிக்கை சுமார் 5 ஆயிரத்து 500 பேர் தான்.

**2 ஆண்டுகளில் 3 மடங்கு**

ஆனால் கடந்த 2 ஆண்டுகளில் இந்த எண்ணிக்கை 3 மடங்காக அதிகரித்தது.

படையினரின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது போர்த்தளபாடங்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கத் தொடங்கியது. மனித உரிமை மீறலைச் சுட்டிக்காட்டி பிரிட்டன் போன்ற சில மேலை நாடுகள் இலங்கை அரசுக்கு ஆயுதங்களை விற்பனை செய்ய மறுத்துவிட்டன.

## வெளிநாட்டு உதவி கிடைத்தும் வளர்ச்சித் திட்டங்கள் பாதிப்பு

ஆனால் இலங்கையின் அதிர்ஷ்டம், முன்னாள் கம்யூனிஸ்ட் நாடுகளான, கிழக்கு ஐரோப்பிய நாடுகளான ஹங்கேரி, செக்கோஸ்லேவேகியா, யூகோஸ்லேவேகியா போன்றவை தங்களிடமுள்ள மிதமிஞ்சிய போர் ஆயுதங்களை எந்த நாட்டுக்கும் குறைந்த விலைக்கு விற்க முன் வந்தன. சீனாவும் இதன் வழியில் இலங்கைக்கு ஆயுதங்களை வழங்க முன் வந்துள்ளது.

தனது இராணுவ ஆயுதப் பசியைத் தணிக்க இலங்கை இந்த நாடுகளைப் பயன்படுத்தி வருகின்றது.

**பாதுகாப்புச் செலவு**

1981 ஆம் ஆண்டில் இலங்கையின் இராணுவச் செலவு இந்த நாட்டின மொத்தச் செலவீனத்தில் 3 சதவீதம் மட்டுமே.

ஆனால் 1991 ஆம் ஆண்டில் நாட்டின் மொத்தச் செலவில் 20 சதவீதம் இராணுவத்துக்காக மட்டுமே செலவிடப்படுகிறது.

இன்னும் தெளிவாகக் கூறினால், 1981 ஆம் ஆண்டில் இலங்கை இராணுவத்துக்கெனச் செலவிட்ட தொகை சுமார் ஆயிரத்து 100 கோடி ரூபாவாகும்.

இலங்கை அரசு 1991 இல் 16 ஆயிரத்து 700 கோடி ரூபாவை இராணுவத்துக்காகச் செலவிட்டது.

இலங்கை அரசில் உள்ள 25 அமைச்சுகளில் பாதுகாப்பு அமைச்சுக்கு மட்டும் இலங்கையின் வருமானத்தில் ஐந்தில் ஒரு பங்கு செலவிடப்படுகிறது.

இலங்கை இராணுவம் நாள் ஒன்றுக்கு சராசரி நாலரைக் கோடி ரூபாவைச் செலவழித்து மிகப் பெரிய செலவு பிடிக்கும் யுத்தம் ஒன்றை நடத்தி வருகிறது.

1981 ஆம் ஆண்டில் இலங்கை பெற்ற வெளிநாட்டு உதவி 8 ஆயிரத்து 208 கோடி ரூபா மட்டுமே.

ஆனால் 1990 இல் இலங்கை பெற்ற வெளிநாட்டு உதவி 23 ஆயிரத்து 247 கோடி ரூபாவாகும்.

1981 இல் 8 ஆயிரத்து 208 கோடி ரூபாவை கடனாகப் பெற்றபோது பாதுகாப்புக்கு 1,100 கோடி ரூபாவை மட்டுமே செலவிட்டது. பெற்ற நிதி உதவியில் 12 சதவீதத்தை இராணுவத்துக்கு இலங்கை செலவிட்டது.

ஆனால் 1990 இல் பெற்ற 23 ஆயிரத்து 247 கோடி ரூபா வெளிநாட்டு உதவியில்— 60 சதத்துக்கு மேல்— 14 ஆயிரத்து 600 கோடி ரூபாவை இலங்கை இராணுவத்துக்காகச் செலவிட்டது

வெளிநாட்டு உதவிகள் அதிகரித்த போதிலும், பெரும்பாலான உதவியை இராணுவத்துக்குச் செலவிடுவதாலேயே பொருளாதார வளர்ச்சித் திட்டங்கள் பாதிக்கப்படுகின்றன.

எனவே நடந்து கொண்டிருக்கும் யுத்தம் ஓய்ந்தால் ஒழிய இராணுவத்துக்கான செலவு இலங்கையில் குறையப் போவதில்லை. ★

# கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆசிரியர் இடமாற்றம்

கிளிநொச்சி, ஜூன் 12

கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து நாற்பத்தெட்டு ஆசிரியர்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து பன்னிரண்டு ஆசிரியர்களும் இம் மாதம் [ஜூன்] முதலாம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரக்கூடிய விதத்தில் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

வடக்கு-கிழக்கு மாகாண சபையின் கல்வி அமைச்சு இந்த இடமாற்றங்களைச் செய்துள்ளது. இவ்விடமாற்றம் பற்றி மாகாணசபை கல்வி அமைச்சின் செயலாளர் ஜனாப் எம். ஏ. சி. முகைதீன் மாவட்டக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அறிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் விவரம் வருமாறு:-

**கிளிநொச்சியிலிருந்து**

திருமதி ஜே. வரதராசா- முகமாலை றோ. க. த. க. பா., திருமதி ஆர். மகேஸ்வரன்- ஆனையிறவு அ. த. க. பா., செல்வி எஸ். தில்லைநடராசா-கிளிநொச்சி ம. ம. வி., செல்வி ச. சதாசிவம் - கிளிநொச்சி ம. ம. வி, திரு. ஆ. சௌந்தரலிங்கம் - பரந்தன் இ. ம. வி., திருமதி ஆர். சி. சௌந்தரலிங்கம் - புனித திரேசா ம. க. ம. வி., திருமதி ச. தவராசா - முரசுமோட்டை முருகானந்தா, திருமதி ஆர். பரம்சோதி - முரசுமோட்டை முருகானந்தா, திருமதி ஜே. ஐ. ஞானசேகரம் - கோயில்வயல் அ. த. க. பா., திருமதி ச. ஏ. சாள்ஸ் - இயக்கச்சி அ. த. க. பா.

செல்வி யோ. செல்லமுத்து - பரந்தன் இ. ம. வி., திரு. க. சுப்பிரமணியம் வட்டக்கச்சி ம. வி., - திரு. ச. தேவதாஸ் - முரசுமோட்டை முருகானந்தா, திருமதி ராதை ஜெகதீஸ்வரன் - இந்து ம வி, திருமதி ச. தர்மகுலசிங்கம் - தருமக்கேணி அ. த. க. பா., திருமதி கா சிறுபாகரன் - புனித திரேசா ம. ம வி., திருமதி கமலாதேவி சுரேந்திரா - உருத்திரபுரம் ம. வி., திரு. மு மகாதேவன்- சாமிப்புலம் அ. த. க. பா., திருமதி ச. சுலோசனா - பூநகரி ம. வி., திரு. ப. இரத்தினசபாபதி - குஞ்சுக்குளம் கணேசா.

திரு. வ. கணபதிப்பிள்ளை- பரமன்கிராய் அ. த. க., பா. திரு. சி. ரி. மகாலிங்கம்- புனித திரேசா ம. வி., திரு. அ. சா. அரியகுமார் - மாசார் அ. த. க. பா, திரு, வை. மனோகரன் - முரசுமோட்டை முருகானந்தா, திருமதி ஜெயந்தினி ஈஸ்வரன் - வட்டக்கச்சி ம. வி., திருமதி ப. சற்குணசிங்கம் - வேம்பொடுகேணி றோ. க. பா., செல்வி லோ. மயில்வாகனம் - இராமநாதபுரம் மேற்கு அ. த. க. பா., திரு. ந. சுகுமார் - தர்மபுரம் ம. வி., செல்வி றோசரி ஜெபநாயகி - வன்னேரிக்குளம் ம. வி., திரு வே. குணபாலசிங்கம் - அக்கராயன் ம. வி.

செல்வி ப. இராமலிங்கம்- அக்கராயன் ம. வி., செல்வி ரஞ் நாகலிங்கம்- அக்கராயன் ம. வி, செல்வி ப. யூ. கிறிஸ்ரீன் - அக்கராயன் ம வி., திருமதி கலாநிதி மகாலிங்கம் - தருமபுரம் ம வி, செல்வி சத்தீஸ்வரி சின்னத்தம்பி - புனித பற்றிமா றோ. க. த. க. பா., திருமதி தேவேந்திரா வேலாயுதம்- கிளிநொச்சி இந்து ம. வி., திருமதி செல்வராணி இரட்ணராசா - கிளிநொச்சி இந்து ம வி., திருமதி வா. ஞானவடிவேல் - திருவையாறு அ. த. க. பா., திரு. ச. பாஸ்கரன் - கிளிநொச்சி ம ம. வி., செல்வி இ. பரமலிங்கம்- கிளிநொச்சி ம. ம. வி,

திருமதி நி. தனபாலன்- தருமகேணி அ. த. க. பா., திருமதி கே. சிவனேஸ்வரன்- முகமாலை றோ. க. த க. பா., திருமதி ஜே. ஸ்ரீஸ்கந்தராசா - வெம்பொடுகேணி சீ. ரி. எம். எஸ்., திருமதி ஜே வரதராசன் - வேம்பொடு கேணி சீ.சீ. ரி. எம். எஸ., திருமதி ப விநாயகமூர்த்தி - புன்னை நீராவி அ. த. க. பா., திருமதி தெ. கணேசநாதன்- சாமிப்புலம் அ. த. க. பா., திரு. த. செல்வராசா - அக்கராயன் ம. வி., திரு. ம. அல்போன்ஸ் - இரணைதீவு றோ. க. பா.

**முல்லைத்தீவிலிருந்து**

திரு. எஸ். நந்தகுமார் - மாங்குளம் ம. வி., திரு. என். சடாகரன் - பாரதி வி., திருமதி ச. சிவகுமார் - செம்மலை ம. வி.

திரு நா. செல்வரத்தினம்- இரணைப்பாலை, றோ. க. த. க. பா., செல்வி. மகாராணி தம்பி - உடையார்கட்டு, அ த. க. பா., திரு. த. ச. கதிர்காமநாதன் - வித்தியானந்தா கல்லூரி, திரு. எஸ். இராகவானந்தன் - வித்தியானந்தாக் கல்லூரி, செல்வி தேவமனோகரி குமாரவேல் - விசுமடுக்குளம் யுனிற் 2, அ. த. க. பா., திரு. நா. சுகுமார் - ஒலுமடு, அ. த. க. பா., திருமதி சுமதி பாஸ்கரன் - விசுவமடு அ. த. க. பா., திரு. சிவசாமிஐயர் வியேந்திர சர்மா - மல்லாவி ம. வி.., திருமதி ரஞ்சினி வரதராஜன் - துண்டுவான் அ. த, க. பா. [அ-த-76]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காயமடைந்தோரில் 58 பேர் யாழ். ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், ஜூன் 12

வலிகாமம் வடக்கு, வலிகாமம் மேற்கு மற்றும் கோண்டாவில், தாவடி ஆகிய பகுதிகளில் நேற்று ஸ்ரீலங்கா படையினர் பரவலாக நடத்திய தாக்குதல்களில் நூற்றுக்கும் மேற்பட்ட பொது மக்கள் காயமடைந்தனர்.

நேற்று மாலை 6 மணிவரை யாழ். ஆஸ்பத்திரியில் மட்டும் 58 பேர் காயங்களுடன் சேர்க்கப்பட்டிருந்தனர்.

நேற்று நடந்த விமானக் குண்டுவீச்சு, ஹெலித் தாக்குதல்கள், பீரங்கி மற்றும் ஷெல் தாக்குதல்களிலேயே இவர்கள் அனைவரும் காயமடைந்தனர்.

யாழ். ஆஸ்பத்திரியைத் தவிர, வேறு அந்தந்த இடங்களில் உள்ள ஆஸ்பத்திரிகளிலும் பலர் காயங்களுடன் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருப்போர் வருமாறு:-

சுன்னாகம் பகுதியில் இடம்பெற்ற பொம்மர் குண்டுவீச்சில் கட்டுவனைச் சேர்ந்த கனகர் பூதப்பிள்ளை [வயது 78], நன்னியர் சின்னத்துரை [72], நன்னியர் மீனாட்சி (80), வி. இராமச்சந்திரன் [47], ஹெலி, றொக்கட் தாக்குதலில் சங்குவேலியைச் சேர்ந்த ஆறுமுகம் தர்மராசா [42], ஆகியோரும் —

மல்லாகத்தில் இடம்பெற்ற பொம்மர் குண்டுவீச்சில் பத்திராசா பத்மராணி [33], சந்தியா அன்னபூரணம் [48], தனபாலசிங்கம் ஜரோன் [10], தனபாலசிங்கம் ஜரோனி [8], பர்ணாந்து பாக்கியம் [55], ஸ்ரீதரன் சுகிர்தா [10] ஹெலித் தாக்குதலில் கணேசன் இராசேஸ்வரி [38] ஆகியோரும் —

அளவெட்டிப் பகுதியில் இடம்பெற்ற பொம்மர் குண்டு வீச்சில் முருகையா இராசேஸ்வரி [53], சுந்தரலிங்கம் இந்திராதேவி [43], பொன்னையா சுந்தரலிங்கம் [45], கனகரட்ணம் விஜயலஷ்மி (35), குகதாஸன் விலேஸ்வரி [23], ஸ்ரீநிவாசன்த பாலகுமார் (38) ஹெலித் தாக்குதலில் செல்லக்குமார் ஜீவராணி [32] ஆகியோரும் —

விளானில் இடம்பெற்ற குண்டுவீச்சில் நாகராசா விமலதாஸ் [27], சின்னத்தம்பி நந்தகுமார் [11] ஆகியோரும்

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரிக்கு அருகாமையில் இடம்பெற்ற குண்டுவீச்சின் போது இராமகிருஷ்ணமூர்த்தி பசுபதி என்ற 6 வயதுச் சிறுவன் —

வட்டுக்கோட்டை இறாத்தலடிச் சந்தி மரியா வீதியில் இடம்பெற்ற குண்டுவீச்சில் காத்திகேசு கனகசபை (89), சரவணமுத்து கோமளவல்லி (59), சரவணமுத்து தேவராணி (36), ஆறுமுகம் ரூபசொரூபி (40), வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம் (68) ஆகியோரும் —

மானிப்பாயில் ஹெலி நடத்திய கிறேனேட் தாக்குதலில் அருணாசலம் யோகேஸ்வரன் [33], கந்தையா சிவானந்தன் (49 — நல்லூர்), அப்புத்துரை யேசுராசா [38], கிருஷ்ணபிள்ளை நிர்மலா தேவி (44), இராசேந்திரம் இராசாராணி [32], பரஞ்சோதி கேதீஸ்வரன் [9], கே. பசுபதி (60 — ஆனைக்கோட்டை) ஆகியோரும் —

கோண்டாவில் மேற்கில் ஹெலி நடத்திய கிறேனேட் தாக்குதலில் இரட்ணேஸ்வரன் சந்திரேஸ்வரி (45), செல்லப்பா குணரட்ணம் (69), ஆகியோரும் —

இளவாலை முள்ளானையில் இடம்பெற்ற கடற்படையினரின் பீரங்கித் தாக்குதலில் எஸ். பவானி [20], கிருஷ்ணபிள்ளை அருணா (27), பற்குணராசா இராசலஷ்மி [38], கந்தையா தங்கவேல் [57] பொம்மர் மற்றும் ஆட்லறி ஷெல் தாக்குதலில் நாகலிங்கம் வனஜா [19], சவுரி பிலிப் [73], திருமதி சுகுணகுமார் [40] ஆகியோரும் —

தாவடிப்பகுதியில் ஹெலி தாக்குதல் நடத்தியதில் செல்லையா இராசரட்ணம் [47], குணபாலசிங்கம் பாலேந்திரன் [18] ஆகியோரும் —

மாதகலில் இடம்பெற்ற குண்டுவீச்சுத் தாக்குதலில் இராமநாதன் கிருஷ்லாகாம் [52], வேனிடேற் சார்ள்ஸ் மத்தியூஸ் [49], ஜோசப் இசிதோர் மேரி சவேரியாப்பிள்ளை [60] ஆகியோரும் நேற்றுக் காயமடைந்தனர்.

## தமிழர் புனர்வாழ்வு கழகம் கோரிக்கை

தற்போதைய இராணுவ நடவடிக்கையால் வலி. வடக்கில் இருந்து வெளியேறும் மக்களுக்கு அவசர தேவையான உணவை வழங்குவதற்காக தமிழர் புனர்வாழ்வுக் கழகம், பொது நலஸ்தாபனங்களினதும் உதவி வழங்க விரும்புவோரினதும் உதவியைக் கோரி உள்ளது.

உதவி வழங்க விரும்புவோர் 83/2, காங்கேசன்துறை வீதி, கொக்குவில், சண்டிலிப்பாய் வீதி, அளவெட்டி ஆகிய, இடங்களில் உள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழக காரியாலயங்களுடனும் மருதனார் மடத்தில் உள்ள சர்வோதய பிரதேச அலுவலகத்துடனும் தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.


கிறிஸ்துவுக்காக இளைஞர்

நடத்தும்

சுற்றுப் போட்டிகள்

நொக் அவுட் முறையிலான வலைப்பந்தாட்டம்,

7 பேர் கொண்ட மென்பந்து கிரிக்கெட்

பதிவு செய்யும் இறுதித் தினம்:

14 - 06 - 1992

கிறிஸ்துவுக்காக இளைஞர்,

462, பிரதான வீதி,

சுண்டிக்குளி.

[21352]


மரண அறிவித்தல்கள் 2 ஆம் பக்கத்தில்

## நான்காம் கட்ட விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூன் 12

ஜூன் மாதத்துக்கான நான்காம் கட்ட நிவாரண விநியோகம் சகல கிளைகளிலும் மேற் கொள்ளப்பட்டு வருவதாக ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம் அறிவித்துள்ளது. [இ]

## சிக்கினார்

கொழும்பு, ஜூன் 12

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் நேற்று முன்தினம் வந்திறங்கிய வெளிநாட்டவர் ஒருவர் 20 லட்சம் ரூபா பெறுமதியான 2 கிலோ ஹெரோயினைக் கடத்தி வர முயன்ற போது சிக்கிக்கொண்டார். [த]

### முல்லைத்தீவுப்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் வெளியேறி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேசமயம்—

குமுழமுனை, அலம்பில், தண்ணீரூற்றுப் பகுதிகளில் படையினர் நடத்திய தாக்குதல்களினால் தமிழ் மக்களின் ஏராளமான உடைமைகள் நாசமாகிவிட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. [ஓ-15]

### கடற்படையிடம்..,

(1 ஆம் பக்கம் தொடர்ச்சி)

இருந்திருக்கலாம் என்றும் நம்பப்படுகிறது.

கடற்படையினரின் விசைப் படகுகள் வந்த சமயம் மொத்தம் ஐந்து வள்ளங்கள் அப்பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்தன என்றும் அவற்றில் இரு வள்ளங்கள் கரை திரும்பிவிட்டன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஏனைய மூன்று வள்ளங்களில் இருந்தவர்கள் பிடிபட்ட விவரம் தப்பி வந்த இரு வள்ளங்களில் இருந்தவர்கள் மூலமே தெரியவந்தது. [இ-15]

### ஸ்ரீலங்கா,..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரம், சித்தன்கேணி, வட்டுக்கோட்டை, மானிப்பாய், மற்றும் தாவடி, கோண்டாவில் ஆகிய பகுதிகள் மீது நேற்று முழுவதும் மாறி மாறி இடைவிடாது அகோரத்தனமாக தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

மூன்று பொம்மர்கள், ஓர் அவ்ரோ, இரண்டு ஹெலிக்கொப்டர்கள் ஆகியன மாறி மாறி கண்மூடித்தனமான குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின. பொம்மர்கள் குண்டுகளை வீசியதுடன் றொக்கட் தாக்குதல்களையும் நடத்தின. ஹெலிக்கொப்டர்களில் இருந்து றொக்கட்டுகள் ஏவிவிடப்பட்டன.

பரவலாக நடத்தப்பட்ட இத்தாக்குதல்களில் சுமார் நூறு பேர் வரை படுகாயமடைந்தனர். அவர்களில் ஐம்பத்தெட்டுப் பேர் வரை யாழ். ஆஸ்பத்திரியில் மட்டும் அனுமதிக்கப்பட்டனர்.

கடற்படையினர் நடத்திய பீரங்கித் தாக்குதல்களினாலும் சிலர் உயிரிழந்தனர். முள்ளானையில் திருமதி பாலசிங்கம் பரமேஸ்வரி [வயது 56] என்பவர் பீரங்கித்தாக்குதலுக்கு இலக்காகி உடல் சிதறிப் பலியானார். இச்சம்பவத்தில் உயிரிழந்த மற்றும் இருவரின் சடலங்கள் இன்னும் அடையாளம் காணப்படவில்லை.

விளான் பிள்ளையார் கோயிலடியில் இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சில் ஆறுமுகம் பேபி [வயது 36] அம்பலவாணர் சிவக்கொழுந்து [வயது 70], இரத்தினம் லோகநாதன் [வயது 82] ஆகியோர் உயிரிழந்தனர்.

மாதகலில் இடம்பெற்ற குண்டு வீச்சில் செல்வநாயகம் சார்ள்ஸ் ஹெரிபின் [வயது 19] என்பவர் உயிரிழந்தார். [உ-த-3-15-162]

# மக்கள் இடப்பெயர்வு

ஸ்ரீலங்காப் படையினரின் கோரத் தாக்குதல்கள் காரணமாக வலிகாமம் வடக்கு வலிகாமம் மேற்குப் பகுதிகளில் இருந்து மக்கள் இடம் பெயர்ந்து வருகின்றனர்.

குறிப்பிட்ட சில பகுதிகளில் நேற்று இடைவிடாத தாக்குதல்கள் இடம்பெற்றதால், மக்கள் தமது உடைமைகளைக் கைவிட்டு வெறுங்கையுடன் வெளியேறி வந்தனர்.

பெரும்பாலானவர்கள் கொக்குவில், கோண்டாவில், ஆனைக்கோட்டை, மானிப்பாய், கட்டுடை, சங்கானை, நவாலிப் பகுதிகளில் தஞ்சமடைந்துள்ளனர். [ஒ 15-143]

## பூநகரியிலும் குண்டுவீச்சு

யாழ்ப்பாணம், ஜூன் 12

பூநகரிப் பகுதியிலும் நேற்று பொம்மர்கள் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின என்று தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினமும் அப்பகுதியில் குண்டு வீச்சுக்கள் நடத்தப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம் பூநகரிப் பகுதி படையினர் நேற்று குடியிருப்புப் பகுதிகளை நோக்கி கண்டபடி வேட்டுக்களைத் தீர்த்தனர் என்றும் கூறப்பட்டது.

## அமைய எழுதுவினைஞர் பதவிகள்:

# முன்னர் தெரிவானோருக்கு மீண்டும் போட்டிப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூன் 12

அமைய எழுதுவினைஞர்களாகத் தெரிவு செய்ய நடந்த விசேட போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த சகலருக்கும் மீண்டும் பொதுப் போட்டிப் பரீட்சை ஒன்று நடத்தப்படவுள்ளதாக யாழ். மாவட்ட ஆணையர் செயலகம் நேற்று அறிவித்தது.

சம்பந்தப்பட்டவர்கள் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி நாடளாவிய ரீதியில் பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப்படவிருக்கும். மத்திய, மாகாண சேவையில் எழுதுனர் மற்றும் சமாந்தரதரங்களுக்கு ஆட்சேர்ப்பதற்கான பொதுப் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடையவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இப்பரீட்சைக்கான விண்ணப்ப இறுதித் திகதி எதிர்வரும் ஜூலை 3 ஆம் திகதி எனத் தெரிவிக்கப்படுகிறது.

### பொதுமக்களின்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சேதமடைந்தன.

மானிப்பாய் சந்தைப் பகுதியில் நேற்றுப் பகல் ஹெலி வீசிய கிரனேட்டினால் பலர் காயமடைந்தனர்; சில கட்டடங்கள் சேதமடைந்தன.

சுழிபுரம்—மாதகல் சம்பில் துறைப் பகுதியிலும் நேற்று நண்பகல் ஹெலியிலிருந்து குண்டுகள் வீசப்பட்டன.

சித்தன்கேணி, சுழிபுரம் மாதகல், சில்லாலை, பண்டத்தரிப்பு பகுதிகளில் நடத்தப்பட்ட விமானக் குண்டுவீச்சுகளினால் வீடுகள், கட்டடங்கள், மதில்கள் சேதமடைந்தன.

#### இளவாலையில்

இளவாலை ஆனைவிழுந்தான் பிள்ளையார் கோவில், மயிலங்கூடல் ஞானவைரவர் ஆலயம், இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம், சென். ஹென்றீஸ் கல்லூரி ஆகியனவும் சேதமடைந்தன

விளான் சந்தையடியில் இரண்டு வீடுகள் குண்டு வீச்சால் சேதமடைந்தன.

நேற்றைய தாக்குதல்களினால் அளவெட்டி, மல்லாகம், சுன்னாகம் பகுதிகளில் பொதுமக்களின் உடைமைகளுக்கு பெரும் சேதம் ஏற்பட்டது.

#### மல்லாகத்தில்

மல்லாகம் நீதிமன்றப்பகுதியில் வீசப்பட்ட ஐந்து குண்டுகளினால் அங்கு பல கட்டடங்கள் நாசமாகின. நீதிமன்ற அகதிமுகாம் பெரும் பாதிப்புக்குள்ளானது.

அளவெட்டி கணேஸ்வரத்தில் வீசப்பட்ட குண்டுகளில் ஒன்று வெடிக்கவில்லை.

சுன்னாகம் சந்தைப் பகுதி, சுன்னாகம் ரயில் நிலையத்துக்கு அருகில் உள்ள சில வீடுகள், சுன்னாகம் தேசிய சேமிப்பு வங்கிக்கு அருகில் இருந்த சில கட்டடங்கள், சுன்னாகம் ஐயனார் கோயிலடியில் இருந்த பல கடைகள் ஆகியன பலத்த சேதமடைந்தது.

இணுவில் பகுதியில் ஹெலி நடத்திய தாக்குதலில் சில வீடுகள் சேதமடைந்தன.

இதே வேளை —

வலி வடக்கு, மேற்குப்பகுதிகளில் ஹெலிக்கொப்டர்கள் பரவலாக பல இடங்களில் நடத்திய தாக்குதல்களினால் பல வீடுகளில் கூரைகள் சேதமடைந்தன. (உ-ஓ-3-15-28-68-143-162)

## பாரிய தாக்குதல் நடத்தலாம் என அச்சம்

வடக்கு — கிழக்கில் போர் ஆரம்பமாகி இரண்டு வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு புலிகள் பாரிய தாக்குதல் ஒன்றுக்கு தயாராகி உள்ளனர் என்று பாதுகாப்புப் படைகளுக்கு தகவல்கள் கிடைத்துள்ளனவாம்.

இதனை அடுத்து வடக்கு — கிழக்கில் எதையும் சமாளிக்கப் படையினர் தயார் நிலையில் இருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

## மின்வெட்டு

அடுத்த இரு வாரங்களில் நீரேந்தும் பகுதிகளில் மழை பெய்யாதுவிடின் கொழும்பில் மீண்டும் மின்வெட்டை அமுல் செய்ய வேண்டி ஏற்படும்.

இலங்கை மின்சார நிலையப் பேச்சாளர் ஒருவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

### 3 முனைகளிலும்...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

நேரத்தில் முன்னேற முயன்றுவரும் தாக்குதல்களைத் தொடுத்தனர்.

இராணுவத்துக்கு உதவியாக இரண்டு பொம்மர்கள் ஓர் அவ்ரோ, 2 ஹெலிகொப்டர்கள் ஆகியன வானத் தாக்குதல்களையும் கடற்படைப் படகுகள் பீரங்கித் தாக்குதல்களையும் சமகாலத்தில் நடத்தின. பலாலி இராணுவ முகாமிலிருந்து இடைவிடாது ஷெல் தாக்குதல்களும் நடத்தப்பட்டன.

எனினும் விடுதலைப் புலிகள் படையினருடன் உக்கிர மோதலில் ஈடுபட்டனர். சளைக்காது எதிர்த் தாக்குதல்களை நடத்தினர்.

நேற்று மாலைவரை தொடர்ந்து கடுஞ்சமர் நடந்ததாகப் பிந்திக் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

இச்சமரில் இராணுவத் தரப்பில் 18 பேர் உயிரிழந்ததாக பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி "ரூபவாஹினி" நேற்றிரவு தெரிவித்தது. 16 பேர் படுகாயமடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டது. [அ 15-10]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி ... இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 12 - 06 - 1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org